( முழுப் பதிப்புரிமையுடையது ) ( All Rights Reserved )

**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2023**

**தரம் ஐந்து மாணவர்களுக்கான**

# முன்னோடிப் பரீட்சை - இல-07


# வினாத்தாள் - I


சுட்டெண்:- ..............................................


நேரம் :- 1 மணித்தியாலம்

● **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
* **உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
* **மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**


(01) பின்வரும் மூன்று உருக்களுள் பொருத்தமற்ற உரு,

(1) 

(2) 

(3) 


(02)




சிற்றுண்டிச்சாலையில் வட்ட மேசையைச் சுற்றி எட்டு பிள்ளைகள் அமர்ந்துள்ள ஒழுங்கு அருகில் காட்டப்பட்டுள்ளது. அதன்படி, பரானாவிற்கு இடதுக் கைப்பக்கத்தில் அமர்ந்திருப்பவருக்கு எதிரே அமர்ந்திருப்பவர்,

(1) யமுனா (2) ஆஷா (3) உமா

(03)




இப்பெரிய கனவுரு ஒரேயளவான சிறிய கனவுருக்களை ஒன்றுடன் ஒன்று ஒட்டியதன் மூலம் அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி, இந்த சந்தர்ப்பத்தில் ஒரு முகமேனும் புலப்படாத சிறிய கனவுருக்களின் எண்ணிக்கை,

(1) 8 (2) 6 (3) 4

(04)

**உரு A**



**உரு B**



உரு A யில் காணக்கிடைக்கும் உரு B போன்ற வடிவங்களின் எண்ணிக்கை,

(1) 4 (2) 6 (3) 5

(05) A, B, C ஆகிய மூன்று பெட்டிகளிலும் பந்துகள் உள்ளன. A பெட்டியில் உள்ள பந்துகளின் எண்ணிக்கையைப்போல் இரு மடங்கு B பெட்டியிலும், B பெட்டியில் உள்ள பந்துகளின் எண்ணிக்கையைப்போல் இரு மடங்கு C பெட்டியிலும் பந்துகள் உள்ளன. மூன்று பெட்டிகளிலும் உள்ள பந்துகளின் மொத்த எண்ணிக்கை 28 ஆகும். அதன்படி, B பெட்டியிலுள்ள பந்துகளின் எண்ணிக்கை,

(1) 10 (2) 8 (3) 7

(06) பின்வரும் எண் தொடர்புகளைக் கவனிக்க. இதற்கு ஏற்ப - ? - இனால் காட்டப்படும் எண் எதுவென தெரிவு செய்க.


( 2 △ 3 ) □ 4 = 20

( 4 △ 1 ) □ 6 = 30

( 7 △ 2 ) □ 3 = ?

(1) 15 (2) 36 (3) 27

(07)




இங்கிலாந்தின் நேரம் இலங்கை நேரத்திலும் பார்க்க 6 மணித்தியாலங்கள் குறைவாகும். இலங்கையில் உள்ள இந்த கடிகாரம் எப்போதும் சரியான நேரத்தை விட ஒரு மணித்தியாலம் அதிகமாக காட்டுகிறது. இக்கடிகாரத்தில் காட்டும் நேரத்தின்படி, இங்கிலாந்தின் சரியான நேரம்,

(1) 2.20 (2) 3.20 (3) 1.20

(08) கதிரிடமும் மோகனிடமும் சமனான எண்ணிக்கை வீதம் நாணயக் குற்றிகள் உள்ளன. கதிரிடம் இரண்டு ரூபாய் நாணயக் குற்றிகள் மட்டுமே உள்ளன. மோகனிடம் ஐந்து ரூபாய் நாணயக் குற்றிகள் மட்டுமே உள்ளன. கதிரிடம் இருந்த நாணயக் குற்றிகளின் மொத்தப் பெறுமதி 8.00 ரூபாய் எனின், மோகனிடம் இருந்த நாணயக் குற்றிகளின் மொத்தப் பெறுமதி எவ்வளவு?

(1) ரூபாய் 25.00 (2) ரூபாய் 20.00 (3) ரூபாய் 40.00

(09) வகுப்பறையொன்றில் எப்போதும் இருப்பது,

(1) கூரை (2) ஆசிரியர் (3) மாணவர்கள்

Education கல்வி
kalvi.lk


10) எங்கள் வகுப்பில் உள்ள பிள்ளைகளில் பெரும்பாலானவர்கள் ஆண் பிள்ளைகள் ஆவர். எங்கள் வகுப்பில் உள்ள அனைத்து ஆண் பிள்ளைகளும் விளையாடுகின்றார்கள். விளையாடும் பிள்ளைகளில் சிலர் ஆண் பிள்ளைகள் அல்ல. இவ்விபரங்களின்படி, கீழே காணப்படும் கூற்றுக்களில் மிகச் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

(1) எங்கள் வகுப்பிலுள்ள அனைத்துப் பிள்ளைகளும் விளையாடுகிறார்கள்.

(2) எங்கள் வகுப்பில் விளையாடும் பெண் பிள்ளைகளும் இருக்கிறார்கள்.

(3) எங்கள் வகுப்பில் விளையாடும் அனைத்துப் பிள்ளைகளும் ஆண் பிள்ளைகள் ஆவர்.

1)





பூனையொன்று எலியைத் துரத்திச் செல்லும் சந்தர்ப்பம் ஒன்று மேலே தரப்பட்டுள்ளது. பூனை ஒரு பாய்ச்சலில் 15cm உம், எலி ஒரு பாய்ச்சலில் 10cm உம் முன்னோக்கிப் பாய்கின்றன. இவ்விரு பிராணிகளும் படத்தில் காட்டப்பட்டுள்ள இடங்களிலிருந்து ஒரே நேரத்தில் முன்னோக்கிப் பாய்ந்து செல்கின்றன எனின், பூனை A எனும் இடத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் எலியைப் பிடிக்கிறது?

(1) 40cm தூரத்தில் (2) 50cm தூரத்தில் (3) 45cm தூரத்தில்

2) 5, 15, 25, 35, .........எனும் எண் கோலத்திற்கேற்ப 100 வரையான இலக்கங்களை எழுதும்போது இலக்கம் 5 எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை,

(1) 10 (2) 11 (3) 12


3)




எல்லாப் பக்கங்களும் நீளத்தில் சமனான இம்முக்கோண வடிவக் காணியைச் சுற்றி ஒரேயளவான தூரத்தில் கம்பித்தூண்கள் நடப்பட்டுள்ளன. இம்முக்கோண வடிவக் காணியை A எனும் திசையிலிருந்து பார்க்கும்போது காணக்கிடைக்கும் கம்பித்தூண்களின் எண்ணிக்கை 9 ஆகும். அதன்படி, காணியின் ஏனைய இருபக்கங்களிலும் நடப்பட்டுள்ள கம்பித்தூண்களின் மொத்த எண்ணிக்கை,

(1) 18 (2) 24 (3) 17

4)




உரு A காட்டும் சதுர வடிவக் கடதாசித் துண்டு அம்புக்குறிகள் காட்டும் திசைகளுக்கு இரு தடவைகள் மடிக்கப்பட்டு, அதன் பின்னர் உரு C காட்டும் முறையில் புள்ளிக்கோட்டின் வழியே வெட்டும்போது கிடைக்கும் கடதாசித் துண்டுகள்,

(1) நான்கு முக்கோண வடிவத் துண்டுகளும் ஒரு சதுர வடிவத் துண்டும் ஆகும்.


(2) நான்கு முக்கோண வடிவத் துண்டுகள் ஆகும்.

(3) இரண்டு முக்கோண வடிவத் துண்டுகளும் இரண்டு சதுர வடிவத் துண்டுகளும் ஆகும்.


) ○ = 5 , △ = 2 , □ = 6 , ✳ = 3 எனின், பிழையான தொடர்பைத் தெரிவு செய்க.

(1) △ + □ = ✳ + ○ (2) □ ÷ ✳ = ○ - △ (3) □ - ○ = ✳ - △

) உரு A




உரு B



உரு A யிலுள்ள இலக்கங்களில் இருந்து உரு B யிலுள்ள கோடுகளை நீக்கும்போது பெறப்படும் எண்,


(1) முந்நூற்று அறுபத்து மூன்று (2) ஐந்நூற்று தொண்ணூற்று மூன்று (3) அறுநூற்று முப்பத்தொன்பது

)





கொழும்பிலிருந்து குருணாகல் நகரத்தின் பிரதான நாற்சந்தியை முன்னோக்கி வரும் ஒருவருக்கு தனக்கு முன்னே இருந்த அறிவிப்புப் பலகை காணக்கிடைக்கும் முறை அருகிலுள்ள உருவில் காட்டப்பட்டுள்ளது. அதன்படி, கண்டியிலிருந்து குருணாகல் நகரத்தின் பிரதான நாற்சந்தியை முன்னோக்கி வரும் ஒருவருக்கு தனக்கு முன்னே இருந்த அறிவிப்புப் பலகை காணக்கிடைக்கும் முறையை தெரிவு செய்க.


(1)




(2)




(3)




kalvi.lk

(18) பழ வியாபாரி ஒருவர் இரண்டு தோடம்பழங்களை ரூபாய் 40.00 வீதம் வாங்கி இரண்டு தோடம்பழங்களை ரூபாய் 60.00 வீதம் விற்றார். நேற்று அவர் தோடம்பழங்களை விற்றதால் ரூபாய் 80.00 ஐ இலாபமாகப் பெற்றுக்கொண்டார். அதன்படி, அவர் நேற்று விற்ற தோடம்பழங்களின் எண்ணிக்கை,

(1) 8 (2) 4 (3) 6

(19) நஸீர் ஆண் பிள்ளையாவான். அவனுக்கு இருந்த சகோதரர்களின் எண்ணிக்கையும், சகோதரிகளின் எண்ணிக்கையும் சமனாகும். அதன்படி, நஸீரின் அக்காவிற்கு இருந்த சகோதரர்களின் எண்ணிக்கை சகோதரிகளின் எண்ணிக்கையிலும்,

(1) கூடியதாகும். (2) சமனாகும். (3) குறைவாகும்.


(20) நாதன், ரஞ்சித், வாசு, பாலா ஆகிய நால்வரில் மூவர் ரஞ்சித்தை விட உயரம் குறைந்தவர்கள். இருவர் நாதனை விட உயரம் கூடியவர்கள். பாலா, வாசுவை விட உயரம் குறைந்தவன். அதன்படி, நான்கு பிள்ளைகளின் பெயர்களை உயரம் அதிகரித்துச் செல்லும் ஒழுங்கில் எழுதினால் கிடைப்பது,

(1) நாதன் - பாலா - ரஞ்சித் - வாசு (2) பாலா - நாதன் - வாசு - ரஞ்சித் (3) ரஞ்சித் - வாசு - நாதன் - பாலா

(21) ஒரு மீற்றர் நீளமான கம்பியொன்று இரு துண்டுகளாக வெட்டப்பட்டது. வெட்டிய கம்பித் துண்டுகளில் ஒரு கம்பித் துண்டு மற்றைய கம்பித் துண்டை விட 20cm குறைவாகும். அதன்படி, சிறிய கம்பித் துண்டின் நீளம்,

(1) 45cm (2) 35cm (3) 40cm


(22)




12 பிள்ளைகள் மைதானமொன்றில் நின்றுகொண்டிருந்த முறை இவ்வுருவில் காட்டப்பட்டுள்ளது. அதன்படி, W இற்கு மேற்குத் திசையிலும் Q இற்கு தெற்குத் திசையிலும் நின்றுகொண்டிருக்கும் பிள்ளையின் பெயர்,

(1) Y (2) U (3) T

(23)




குமார் வீட்டிலிருந்து வைத்தியசாலைக்குப் பயணம் செய்த பாதையை மேலேயுள்ள உரு காட்டுகிறது. அதன்படி, குமார் வீட்டிலிருந்து வைத்தியசாலைக்குப் பயணிக்கும்போது ஒரு தடவை மட்டும் திரும்பிய திசை,

(1) மேற்குத் திசை (2) தெற்குத் திசை (3) வடக்குத் திசை

(24) △ = 4 , ○ = 7 , □ = 9 , ✳ = 1 எனின், இந்நான்கு குறியீடுகளையும் பயன்படுத்தி எழுதக்கூடிய மிகக் கூடிய பெறுமதியுள்ள எண்ணைத் தெரிவு செய்க.

(1) ○ □ ✳ △ (2) □ △ ○ ✳ (3) □ ○ △ ✳

(25) குறித்த வருடமொன்றின் ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதி புதன்கிழமையாகும். அதன்படி, இம்மாதத்தின் 1 ஆம் திகதி என்ன கிழமை?

(1) ஞாயிற்றுக்கிழமை (2) திங்கட்கிழமை (3) செவ்வாய்க்கிழமை

(26) மின்குமிழ்க் கோர்வையொன்றில் சிவப்பு, மஞ்சள், சிவப்பு, மஞ்சள் , .... எனும் ஒழுங்குமுறையில் மின்குமிழ்கள் தொங்கவிடப்பட்டுள்ளன. மின்குமிழ்க் கோர்வையில் தொடக்கத்திலும் முடிவிலும் சிவப்பு மின்குமிழ்கள் தொங்கவிடப்பட்டுள்ளன. அதன்படி, மின்குமிழ்க் கோர்வையில் தொங்கவிடப்பட்டுள்ள மொத்த மின்குமிழ்களின் எண்ணிக்கையாக இருக்கக்கூடியது,

(1) 24 (2) 36 (3) 29

(27) ஓட்டப் போட்டியொன்றில் இக்பால் பி.ப 3.10 இற்கு போட்டியை நிறைவு செய்தார். அமீன், அதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னும் ஆசிம், அமீன் முடித்த நேரத்தை விட 20 நிமிடங்களுக்கு முன்னும் போட்டியை நிறைவு செய்தனர். அதன்படி, ஓட்டப் போட்டியில் வெற்றிப் பெற்றவர் போட்டியை நிறைவு செய்த நேரம்,

(1) பி.ப 3.45 (2) பி.ப 2.20 (3) பி.ப 2.35

(28) 4 இன் மடங்காகவும் 6 இன் மடங்காகவும் வரக்கூடிய ஓர் எண்ணின் அரைவாசியாக இருக்கக்கூடியது,

(1) 18 (2) 21 (3) 16

(29) "அண்ணன் புகையிரதத்தில் ஏறி பயணச்சீட்டு ஒன்றை வாங்கிவிட்டு ஜன்னலுக்கு அருகேயிருந்த இருக்கையில் அமர்ந்தார்." இக்கூற்று பிழையானது. இக்கூற்று சரியாவதற்குச் செய்ய வேண்டிய மாற்றம்,

(1) "இருக்கையில்" எனும் சொல்லிற்குப் பதிலாக "கதிரையில்" எனச் சேர்த்தல்.
(2) "புகையிரதத்தில்" எனும் சொல்லிற்குப் பதிலாக "பேருந்தில்" எனச் சேர்த்தல்.
(3) "அமர்ந்தான்" எனும் சொல்லிற்குப் பதிலாக "நின்றான்" எனச் சேர்த்தல்.


kalvi.lk

(30) ஒரு மேசையின் மீது ஒரு பெரிய பெட்டி உள்ளது. அந்தப் பெரிய பெட்டிக்குள் மூன்று சிறிய பெட்டிகள் உள்ளன. அந்த ஒவ்வொரு சிறிய பெட்டிக்குள்ளேயும் நான்கு வீதம் மிகச் சிறிய பெட்டிகள் உள்ளன. அதன்படி, மேசையின் மீதுள்ள மொத்தப் பெட்டிகளின் எண்ணிக்கை,

(1) 16 (2) 14 (3) 18

(31) ஒரு வரிசையில் கவின் தொடக்கத்திலிருந்து 9 ஆவது நபராகவும் கடைசியிலிருந்து 13 ஆவது நபராகவும் நின்றுகொண்டிருந்தான். அவ்வரிசையின் சரிநடுவில் வசீம் நின்றுகொண்டிருந்தான். அதன்படி, வசீம் தொடக்கத்திலிருந்து எத்தனையாவதாக நின்றுகொண்டிருக்கின்றான்?

(1) ஒன்பதாவதாக (2) பத்தாவதாக (3) பதினொன்றாவதாக

(32) 

இத்திண்மம் ஒரேயளவான சிறிய சதுரமுகிகளை ஒன்றுடன் ஒன்று ஒட்டியதன் மூலம் அமைக்கப்பட்டுள்ளது. இப்பெரிய சதுரமுகியை எந்த முகத்திசையில் பார்த்தாலும் 4 சதுரமுகிகள் தோற்றமளிக்கும். அதேபோல் எந்த முகத்திசையில் இருந்து பார்த்தாலும் 9 சதுரமுகிகள் தோற்றமளிக்க வேண்டுமாயின் இன்னும் எத்தனை சிறிய சதுரமுகிகளை இவற்றுடன் சேர்க்கப்படுதல் வேண்டும்?

(1) 19 (2) 12 (3) 16

(33) மோகன், கதிர், இக்பால், நாதன் ஆகியோர் நண்பர்களாவர். இந்நான்கு நண்பர்கள் ஒவ்வொருவரும் அவர்களின் பிறந்த தினத்திற்கு ஒருவருக்கொருவர் வாழ்த்து மடல்களை அனுப்பிக் கொள்வர். அதன்படி, ஒரு வருடத்தில் இவர்களிடையே பரிமாறிக்கொண்ட வாழ்த்து மடல்களின் எண்ணிக்கை,

(1) 24 (2) 12 (3) 15

(34) பொருட்கள் சிலவற்றின் விலைகளின் கூட்டுத்தொகைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| பென்சில் 1<br>பேனை 1 | → **ரூபாய் 25.00** | பென்சில்கள் 3<br>பேனைகள் 2 | → **ரூபாய் 60.00** |
|---|---|---|---|

இத்தகவல்களின்படி, பென்சில் ஒன்றின் விலை,

(1) ரூபாய் 20.00 (2) ரூபாய் 15.00 (3) ரூபாய் 10.00

(35) அப்பா தன்னிடமிருந்த புத்தகங்களை தனது பிள்ளைகளுக்கு 4 வீதம் பகிர்ந்து கொடுத்தபோது அவரிடம் இரண்டு புத்தகங்கள் எஞ்சின. 2 வீதம் பகிர்ந்து கொடுத்தபோது அவரிடம் எட்டு புத்தகங்கள் எஞ்சின. அதன்படி, 3 வீதம் பகிர்ந்து கொடுத்தபோது அவரிடம் எத்தனை புத்தகங்கள் எஞ்சின?

(1) 5 (2) 6 (3) 4

(36) கொய்யா மரத்தை விட தென்னை மரம் மூன்று மடங்கு உயரமானது. மா மரத்தை விட தென்னை மரம் இரண்டு மடங்கு உயரமானது. றம்புட்டான் மரத்தை விட தென்னை மரம் நான்கு மடங்கு உயரமானது. அதன்படி, ஒவ்வொரு மரத்தின் உயரமும் படிப்படியாக அதிகரிக்கும் வகையில் எழுதப்பட்டுள்ள விடை,

(1) மா மரம் - கொய்யா மரம் - றம்புட்டான் மரம் - தென்னை மரம்

(2) கொய்யா மரம் - றம்புட்டான் மரம் - மா மரம் - தென்னை மரம்

(3) றம்புட்டான் மரம் - கொய்யா மரம் - மா மரம் - தென்னை மரம்

(37) பின்வரும் பாடலை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாவிற்கான விடையைத் தெரிவு செய்க.

நுரைகள் மோதும் கரையைப் பார்
நூலிற் றூங்கும் இரையைப் பார்
ஓடும் மீன்கள் நிரையைப் பார்
ஒளிக்கும் நண்டின் விரைவைப் பார்

இப்பாடலில் வர்ணிக்கப்படும் காட்சி,

(1) கடற்கரைக் காட்சி

(2) வயற்க் காட்சி


(3) காலைக் காட்சி

(38) "ஓட்டப்போட்டியில் வெற்றிப் பெறுவது இலகுவான காரியமல்ல."


மேலேயுள்ள வாக்கியத்தை நன்கு விபரிக்கின்ற விடையைத் தெரிவு செய்க.


(1) ஓட்டப் போட்டியில் வெற்றிப் பெற முடியாது. (2) ஓட்டப் போட்டியில் வெற்றிப் பெறுவது கஷ்டமாகும்.


(3) ஓட்டப் போட்டியில் அதிக எண்ணிக்கையிலான போட்டியாளர்கள் கலந்து கொள்வார்கள்.

(39) 

பின்வரும் கார்ட்போர்ட் அட்டைகளிலிருந்து ஒரு கார்ட்போர்ட் அட்டையைப் புள்ளிக்கோடுகளின் வழியே மடித்து ஒட்டுவதன் மூலம் இத்திண்மத்தை உருவாக்கலாம். அதன்படி, அக்கார்ட்போர்ட் அட்டையைத் தெரிவு செய்க.

(1) 

(2) 

(3) 

(40) அண்ணனை விட தம்பியிடம் கட்டாயமாக குறைவாக இருப்பது,

(1) உயரம் (2) நிறை (3) வயது

kalvi.lk

( முழுப் பதிப்புரிமையுடையது ) ( All Rights Reserved )

**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2023**

**தரம் ஐந்து மாணவர்களுக்கான**

# முன்னோடிப் பரீட்சை - இல-07

# வினாத்தாள் - II

சுட்டெண் :- ..........................................................

நேரம் :- 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

● **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
*** உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
*** மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**

**(01) பின்வரும் பந்தியை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.**

நான் ஆசையுடன் நட்ட ஜம்பு மரக்கன்று இப்போது பெரிய மரமாகி விட்டது. அந்த மரம் எங்கள் வீட்டில் முன்னால் இருக்கின்றது. ஜம்பு மரத்தில் ஜம்பு பழங்களும், பூக்களும் நிறைந்து காணப்பட்டன. நான் அம்மாவிடம் ஜம்பு பழங்களை பறித்து தருமாறு கூறினேன். அம்மா, அப்பாவிடம் "ரவி நட்ட மரம் நன்றாக காய்த்திருக்கிறது. எல்லோருக்கும் ஜம்பு பழங்களை பறித்து கொடுப்போம்" என்று கூறினர்.

(i) ஜம்பு மரம் யாரால் நடப்பட்டது? ..........................................................

(ii) பந்தியில் வந்துள்ள பெயரடைமொழி எது? ..........................................................

(iii) பந்தியில் வந்துள்ள எதிர்ப்பாற் சோடியை இனங்கண்டு எழுதுக. ..........................................................

(iv) "அனைவருக்கும்" என்ற கருத்தை தரும் சொல்லை இனங்கண்டு எழுதுக. ..........................................................

(v) உயர்திணை, தன்மை, ஒருமை பெயர்ச்சொல்லை எழுதுக. ..........................................................

**(02) கீழே முதலில் தரப்பட்டுள்ள சொற்களை வாக்கியங்களில் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) பளபள, சுறுசுறு ( அடுக்குமொழியாக , இரட்டைக்கிளவியாக , இணைமொழியாக )

(ii) பட்டம் பதவி, அருமை பெருமை ( இணைமொழியாக , இரட்டைக்கிளவியாக , அடுக்குமொழியாக )

(iii) கூடை கூடையாக, துண்டு துண்டாக ( இணைமொழியாக , அடுக்குமொழியாக , இரட்டைக்கிளவியாக )

**(03) பின்வரும் பேச்சு வழக்கிலுள்ள வாக்கியத்தை எழுத்து வழக்கில் எழுதுக.**

நாங்க கடைக்கு போட்டு வாறம் :- ..........................................................

**(04) பொருத்தமான இடங்களில் நிறுத்தக்குறியீடுகளை இடுக.**

பூச்சாடியில் நீலம் சிவப்பு மஞ்சள் வெள்ளை ஆகிய நிறங்களில் பூக்கள் உள்ளதா என ஆசிரியர் கேட்டார்

**(05) கட்டத்தில் உள்ள எழுத்துக்களிலிருந்து பொருத்தமான எழுத்தைத் தெரிவுசெய்து பின்வரும் சொற்களைப் பூரணப்படுத்துக.**

| ன , ண , ல , ழ |
|---|

(i) அ...........ங்காரம் (ii) க...........க்காயர் (iii) மைதா...........ம் (iv) கி...........க்கு

**(06) தொடக்கத்தில் தரப்பட்டுள்ள சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) கோபம் :- எதிரி , சினம் , பயம் , சண்டை (ii) அழகு :- சொண்டு , வெற்றி , மகிழ்ச்சி , எழில்

**(07) கீழே தரப்பட்டுள்ளவற்றிற்குப் பொருத்தமான சொற்களை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து புள்ளிக்கோடுகளின் மீது எழுதுக.**

( ஒளிர்ந்தது , வந்தேன் , சிரிப்பான் , சென்றாய் )

(i) முன்னிலை ஒருமை இறந்தகால வினைச்சொல் :- ..........................................................

(ii) அஃறிணை படர்க்கை ஒருமை வினைச்சொல் :- ..........................................................

(iii) உயர்திணை ஒருமை எதிர்கால வினைச்சொல் :- ..........................................................

**(08) கீழே தரப்பட்டுள்ள கவிதையிலுள்ள வெற்றிடத்தைப் பூரணப்படுத்துக.**

மீனினம் ஓடிப் பரக்குதம்மா - ஊடே

வெள்ளி ஓடமொன்று செல்லுதம்மா

வானுங் கடலாக மாறுதம்மா - இந்த

kalvi.lk

..........................................................

(09) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான எழுவாயை அடைப்பிலிருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) .............................. ( இவை , அது , அவை ) ஒரு அழகிய பூஞ்சோலை ஆகும்.

(ii) .............................. ( அவர்கள் , அது , அவை ) வேகமாகப் பறந்து செல்கின்றன.

(iii) .............................. ( நீ , அவள், நான் ) எங்கே செல்கிறாய்?

(10) வெற்றிடங்களுக்குப் பொருத்தமான விடைகளை எழுதுக.

(i)  This is a ..................................

(ii) "யன்னல்" என்பதற்குரிய ஆங்கிலச் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக. ..................................

(11) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்துக்களைத் தமிழில் எழுதுக.

(i) May I come in? :-.......................................... (ii) What are these :- ..........................................

(12) பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

எனது பென்சில் எங்கே? :- ..........................................

(13) பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.

ம(ட்)ட படகினிய் :- ..........................................

(14) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தினைத் தமிழில் எழுதுக.


அண்ணா இருக்கிறார் :- ..........................................

(15) வெற்றிடங்களை நிரப்புக.

| முந்திய எண் | எண் | பிந்திய எண் |
|---|---|---|
| .................... | 59099 | .................... |

(16) (i) பொது வித்தியாசம் 8 ஆகவுள்ள எண் கோலம் ஒன்றை எழுதுக. ..........................................

(ii) எண் கோலத்தில் அடுத்துவரும் இரு எண்களையும் முறையே எழுதுக. 5060, 5040, 5020, 5000, ................, ................


(17)  உருவில் காட்டப்பட்டுள்ள திண்மத்திலுள்ள,

(i) வளைந்த மேற்பரப்புகளின் எண்ணிக்கை யாது? ..........................................

(ii) தட்டையான மேற்பரப்புகளின் எண்ணிக்கை யாது? ..........................................

(18) 8 முட்டைகள் வீதம் உள்ள ஆறு பெட்டிகளும், 12 முட்டைகள் வீதம் உள்ள நான்கு பெட்டிகளும் உள்ளன. அதன்படி, அந்த பத்து பெட்டிகளிலும் உள்ள முட்டைகளின் மொத்த எண்ணிக்கை யாது?..........................................

(19) [2] [6] [9] என்னும் இலக்க அட்டைகளைப் பயன்படுத்தி அமைக்கத்தக்க மூன்று இலக்கங்களைக் கொண்ட ஆறு எண்களை ஏறுவரிசையில் ஒழுங்குபடுத்தி வெற்றிடங்களை நிரப்புக. ..............., 296, ..............., ..............., 926, ...............

(20) 


இவ்வுருவில் உள்ள செவ்வகத்தைச் சதுரமாக்குவதற்கு அதன் அகலப் பக்கத்துடன் மேலும் எத்தனை மீற்றரையும் சென்ரிமீற்றரையும் கூட்ட வேண்டும்? ..........................................

(21) பேருந்துத் தரிப்பிடத்திற்கு [15:40] இற்கு வரவேண்டிய பேருந்து 35 நிமிடங்கள் தாமதமாக வந்தது. அதன்படி, அப்பேருந்து, பேருந்துத் தரிப்பிடத்திற்கு வந்த நேரத்தை 24 மணித்தியாலக் கடிகார நேரத்தில் எழுதுக. ....................

(22) அமீன் வாங்கிய பொருட்களின் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது.

(அ) ஒரு கிலோகிராம் ரூபாய் 260.00 வீதம் 500g பருப்பு.

(ஆ) ஒரு லீற்றர் ரூபாய் 380.00 வீதம் 500ml மண்ணெண்ணெய்.

(இ) ஒரு மீற்றர் ரூபாய் 420.00 வீதம் 50cm துணி. (ஈ) ஒன்று ரூபாய் 80.00 வீதம் மூன்று தேங்காய்கள்.

| பொருட்கள் | ரூபாய் | சதம் |
|---|---|---|
| (1) மண்ணெண்ணெய் | 190 | 00 |
| (2) தேங்காய் | .................... | .................... |
| (3) பருப்பு | .................... | .................... |
| (4) துணி | .................... | .................... |

(i) இத்தகவல்களுக்கேற்ப பொருட்களுக்காகச் செலுத்திய பணத்தை வெற்றிடங்களில் குறிப்பிடுக.

(ii) எல்லாப் பொருட்களுக்காகவும் செலுத்தப்பட்ட மொத்தப் பணம் யாது?

ரூபாய் ........................ சதம் ...............

(23) ஒரு பாத்திரத்திலுள்ள தேங்காயெண்ணெய்யில் 3 லீற்றர் 400 மில்லிலீற்றரை அகற்றிய பின்னர் எஞ்சியிருக்கும் கனவளவு 8 லீற்றர் 700 மில்லிலீற்றர் ஆகும். அதன்படி, அப்பாத்திரத்தில் முதலில் இருந்த தேங்காயெண்ணெய்யின் கனவளவு யாது? ..........................................


kalvi.lk

சுட்டெண்:-..............................

(24) I V X கட்டத்திலுள்ள எல்லா உரோம எண்குறிகளையும் பயன்படுத்தி அமைக்கத்தக்க மிகச் சிறிய உரோம எண்குறியை எழுதுக. ..............................

(25) ஒரு பிள்ளை A என்னும் இடத்திலிருந்து 10m கிழக்குத் திசை நோக்கி பயணித்தது. அதன் பின்னர் அப்பிள்ளை அவ்விடத்திலிருந்து 10m வடக்குத் திசை நோக்கிப் பயணித்து, B என்னும் இடத்தில் நின்றது. அதன்படி, A யிற்கு எத்திசையில் B அமைந்துள்ளது? ..............................

(26)



(i) இவ்வுருவின் சமச்சீர் அச்சுக்களை வரைந்துக் காட்டுக.

(ii) இவ்வுருவில் காணக்கிடைக்கும் செங்கோணங்களின் எண்ணிக்கை யாது? ..................

(27) 1, 3, 9, 27, 81, [ ] இவ்வெண் கோலத்தில் வெற்றுக்கூட்டிற்குப் பொருத்தமான எண்ணை வெற்றுக்கூட்டினுள்ளேயே எழுதுக.

(28) (i) பின்வரும் எண்களை ஏறுவரிசைப்படுத்தும்போது சரிநடுவில் வரும் எண் யாது?

37576 , 31979 , 37605 , 33743 , 31099 :- ..............................

(ii) மேலே எண்வரிசையில் உள்ள மிகப் பெரிய எண்ணை எழுத்துக்களில் எழுதுக. ..............................

(29) வசீமிடம் இருந்த 48 பழங்களைக் கொண்ட றம்புட்டான் பழக் குவியலில் $\frac{1}{4}$ ஐ விற்றான். மீதியாக இருந்த றம்புட்டான் பழங்களை நஸீர், பைசர், நிலாம் ஆகிய நண்பர்கள் மூவரிடையே சமனாகப் பகிர்ந்தளித்தான். அதன்படி, ஒருவருக்குக் கிடைத்த றம்புட்டான் பழங்களின் எண்ணிக்கை எவ்வளவு? ..............................

*** இலக்கம் (30) தொடக்கம் (59) வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(30) எல்லே விளையாட்டில் ஒரு குழுவில் இருக்க வேண்டிய வீரர்களின் உயர்ந்தபட்ச எண்ணிக்கை,
(1) 12 (2) 16 (3) 19

(31) கொல்லன் கம்மாலையில் பயன்படுத்தப்படாத உபகரணம்,
(1) பரப்புப்பலகை (2) பட்டறைக்கல் (3) சம்மட்டி

(32) விரைவாக முளைக்கக்கூடிய வித்துக்கள்,
(1) மரமுந்திரி, மா வித்து (2) தேங்காய், கமுகு (3) கடுகு, பயறு

(33) உணவுப் பொருட்களின் மேலுறைகளிலுள்ள Exp. Date என்பது,
(1) உற்பத்தித் திகதி (2) காலாவதித் திகதி
(3) உணவுப் பொருட்கள் விற்பனைக்காக கடைக்கு கொண்டு வரப்பட்ட திகதி

(34) தனது கழிவைக் குழித் தோண்டிப் புதைக்கும் ஆற்றல் கொண்ட பிராணி,
(1) தவளை (2) முயல் (3) பூனை

(35) இலங்கைத் தேசிய கொடியில் முஸ்லிம் மக்களைக் குறித்து நிற்பது,
(1) செம்மஞ்சள் நிறப் பகுதி (2) பச்சை நிறப் பகுதி (3) மஞ்சள் நிறப் பகுதி

(36) தெறியோட்டையைத் தைப்பதற்கு மிகவும் உகந்த தையல் முறை,
(1) கம்பளித் தையல் (2) சங்கிலித் தையல் (3) வெட்டுக்குத்துத் தையல்

(37) எண்ணை, எருக்கலை, சீதேவியார் செங்கழுநீர் ஆகிய வித்துக்கள் பரம்பல் அடையும் முறை,
(1) விலங்குகளின் மூலம் (2) நீரின் மூலம் (3) காற்றின் மூலம்

(38) மகாவலி கங்கை கடலுடன் கலக்கும் மாகாணம்,
(1) மத்திய மாகாணம் (2) கிழக்கு மாகாணம் (3) வட மாகாணம்

(39) இலங்கையில் கடற்கரையை அண்மித்து இருக்கும் மாகாணங்களின் எண்ணிக்கை,
(1) 5 (2) 4 (3) 6

(40)



இவ்வுருவினால் காட்டப்பட்டுள்ள இலைகளைக் கொண்ட தாவரம்,
(1) நொச்சி (2) ஆமணக்கு (3) சதைகரைச்சான்

(41) நீரில் மூழ்கிய ஒருவருக்கு உடனடியாகச் செய்ய வேண்டியது,
(1) நிலத்தில் படுக்க வைத்து வயிற்றை அமுக்கி நீரை வெளியேற்றுதல்.
(2) செயற்கைச் சுவாசம் கொடுத்தல். (3) சூடான பானத்தைக் குடிக்கக் கொடுத்தல்.

(42) மண்சரிவு ஏற்படவுள்ள பிரதேசத்திலிருந்து மக்களை விரைவாக வெளியேறுமாறு அறிவுறுத்துவதற்கு மிகவும் உகந்த ஊடகம்,
(1) பத்திரிகை (2) தொலைபேசி (3) ஒலிபெருக்கி

kalvi.lk

(43) வண்ணத்துப்பூச்சியின் வாழ்க்கை வட்டத்தின் எப்பருவத்தில் தாவர இலைகளை உணவாக உட்கொள்ளும்?
(1) புழு (2) முட்டை (3) வண்ணத்துப்பூச்சி

(44) நீரில் நீந்துவதற்கு ஏற்ற பாதங்களைக் கொண்ட பிராணி,
(1) கொக்கு (2) வாத்து (3) மீன்கொத்தி

(45) ஒரு குழுவில் விளையாடக்கூடிய ஆகக்கூடிய வீரர்களின் எண்ணிக்கை இரண்டு அல்லாத விளையாட்டுக்கள்,
(1) மேசைப்பந்து, டென்னிஸ் (2) பூப்பந்து, கரம் (3) சதுரங்கம், டாம்

(46) ஒரே சமனான எண்ணிக்கையிலான பாதங்களைக் கொண்ட பிராணிகள்,
(1) சிலந்தி, உண்ணி (2) பூரான், மரவட்டை (3) இராமபாணம், நண்டு

(47) சுத்தமான நீரின் பண்பு அல்லாதது,
(1) நிறமற்றது (2) வடிவமுடையது (3) சுவையற்றது

(48) இலங்கைக்கே உரித்தான முலையூட்டி அல்லாதது,
(1) மன்புளுட்டா (2) கருங்குரங்கு (3) சுண்டெலி

(49) இலங்கையின் மிகச் சிறிய மாவட்டமும் மிகப் பெரிய மாவட்டமும் ஒழுங்குமுறையில் எழுதப்பட்டுள்ள விடை,
(1) திருகோணமலை, புத்தளம் (2) அம்பாந்தோட்டை, நுவரெலியா (3) கொழும்பு, அநுராதபுரம்

(50) ஆரோக்கியமான நாற்றுக்களைத் தரக்கூடிய வித்துக்களின் இயல்பு அல்லாதது,
(1) உணவு நிரம்பி செழித்து வளர்ந்திருத்தல். (2) பழுதுகளும் பூச்சிகளும் இருத்தல்.
(3) நன்கு முதிர்ச்சியடைந்திருத்தல்.

(51) 
இவ்வுருவில் காணக்கிடைக்கும் மாகாணம்,
(1) தென் மாகாணம் (2) வடமேல் மாகாணம் (3) கிழக்கு மாகாணம்

(52) காற்றினால் இயங்கும் இசைக்கருவி அல்லாதது,
(1) மேளம் (2) நாதஸ்வரம் (3) புல்லாங்குழல்

(53) வீட்டுத் தோட்டத்தில் பூச்சி பீடைகளைக் கட்டுப்படுத்த வளர்க்கப்படும் தாவரம்,
(1) துளசி (2) செவ்வந்தி (3) வேம்பு

(54) நாற்றுமேடைகளிலிருந்து பெற்று பாத்திகளில் நடப்படும் பயிர்கள்,
(1) தக்காளி, மிளகாய் (2) பயற்றை, பூசனி (3) வெண்டி, பாகல்

(55) புகையிரத சேவையின் நன்மையாக அமையாதது,
(1) அதிகமான பொருட்களைக் கொண்டு செல்லலாம். (2) குறைந்த கட்டணத்தில் பயணிக்கலாம்.
(3) விரும்பிய இடங்களில் நிறுத்தி இறங்க முடியும்.

(56) சிவப்பு சிலுவை அடையாளம் காணப்படும் வாகனம்,
(1) இலங்கை அஞ்சல் திணைக்களத்திற்குரிய வாகனம். (2) பொலிஸ் நிலையத்திற்குரிய வாகனம்.
(3) அம்பியுலன்ஸ் வண்டி

(57) நீருள்ள கண்ணாடிக் குவளையொன்றில் பனிக்கட்டியை இட்டால் நிகழாதது,
(1) சிறிது நேரத்தில் நீரின் நிறம் மாற்றமடையும்.
(2) சிறிது நேரத்தில் குவளையின் வெளிப்புறத்தில் நீர்த்துளிகள் தோன்றும்.
(3) பனிக்கட்டி நீரின் மேல் மிதக்கும்.

(58) குறித்த வேளையில் உண்ணாதிருத்தல் மற்றும் உடன் உணவுகள், மிளகாய் அதிகம் அடங்கியுள்ள உணவுகள் என்பவற்றை உண்பதால் ஏற்படும் நோய்,
(1) வாந்திபேதி (2) இரப்பையழற்சி (3) உயர் குருதியமுக்கம்

(59) வண்ணத்துப்பூச்சியின் வாழ்க்கை வட்டத்தில் நான்கு பருவங்கள் உள்ளன. அதன்படி, வண்ணத்துப்பூச்சியின் வாழ்க்கை வட்டத்தின் மூன்றாவது பருவம்,
(1) புழு (2) முட்டை (3) கூட்டுப்புழு

**(60) "நான் கண்ட ஒரு வீதி விபத்து" எனும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக.**
**(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும், எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)**

(1) ..................................................................................................................

(2) ..................................................................................................................

(3) ..................................................................................................................

kalvi.lk